## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண். 87/2025**

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 01ம் நாள் திங்கள் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **அன்னபூரணி (எ) சத்யா** | **தொழில் :** | வீட்டு குடித்தனம் |
| **கணவர் பெயர் :** | **லேட். செந்தில்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | பட்டுக்கோட்டை | **வயது** | 44 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**01.06.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன்,2ம் வாதி என் மகள். நான் எனது முதன்மை சாட்சியத்தை 2ம் வாதிக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 29.08.2006 தேதியிட்ட எனது பிறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 2ம் வாதியின் ஆதார் கார்டு நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.)**வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். எனது பெயரிலுள்ள ஆதார் கார்டு நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.)**வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். எனது குடும்ப அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.)**வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். எனது பெயரிலுள்ள வாக்காளர் அடையாள அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.)**வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். 04.12.2023 ல் 1ம் பிரதிவாதி அனுப்பிய மேலெழுத்து

கடிதம் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். 14.03.2024 ல் 2ம் பிரதிவாதி அனுப்பிய மேலெழுத்து கடிதம் நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பெயர் மாறியதால் சரியான பெயரை பதிவு செய்ய வேண்டி வழக்குதாக்கல் செய்துள்ளேன். 2ம் வாதி பிறந்த தேதி என்ன என்றால் 29.06.2008 ல். எங்கு பிறந்தார் என்றால் பட்டுக்கோட்டை குமரன் மருத்துவமனையில் பிறந்தார். எனக்கு பிரசவத்தின்போது என் குடும்பத்தில் இருந்தவர்தான் விவரங்கள்சொன்னார்கள் என்றால் ஆமாம் ஆனால் நான் சொல்லவில்லை. என் குடும்பத்தார் தெரிவித்ததன் அடிப்படையில்தான் குமரன் மருத்துவமனையிலிருந்து என் மகளின் பிறப்பு சான்றுக்காக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். என் செல்ல பெயர் சத்யா என்றால் ஆமாம்.

என் ஆவண பெயர் அன்னபூரணி. சத்யா என்ற பெயர் பிறப்பு சான்றிதழில் பதிவான விவரம் 2023 ல்தான் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என் குழந்தை பிறந்து 7 வருடம் கழித்து குழந்தையின் பெயர் நகராட்சியில் சேர்க்க கோரி மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் எனக்கு அப்போதே விவரம் தெரியும் காலம் கடந்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் நகராட்சியில் பெயரை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. முதல் பரிகாரம் கிடைத்தாலே போதும் 2ம் பரிகாரம் தேவையற்றது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையில்லாத தரப்பினர் என்பதால் செலவுதொகையுன் 2ம் பிரதிவாதியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.